**செய்தி வெளியீடு எண்: 608** **நாள்: 12.10.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (12.10.2012) தலைமைச் செயலகத்தில், சென்னை, பி.எஸ். குமாரசாமி ராசா சாலையில் அமைந்துள்ள, அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்தில் 10 கோடியே 14 லட்சம் ரூபாய் செலவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

தமிழக அரசின் சார்பில் இயங்கி வரும் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம், ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) / பழங்குடியினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்), மாற்றுத்திறனாளிகள் மற்றும் இதர பிரிவு மாணவர்கள் மற்றும் கிராமப்புர மாணவர்கள், குடிமைப் பணி தேர்வுகளில் அதிக அளவில் தேர்ச்சி பெறச் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. பெற்றோர் ஆண்டு வருமானம் ஒரு லட்சம் ரூபாய்க்கு மிகாமல் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு இலவச உண்டி உறைவிட வசதியுடன் இந்த மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இப்பயிற்சி மைய மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் உணவுக் கட்டணத் தொகையை மாதமொன்றிற்கு 800 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக ஆக உயர்த்தியதோடு, இந்த தொகையினை ஒவ்வொரு ஆண்டும் ஐந்து சதவீதம் உயர்த்தி வழங்கவும் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், இப்பயிற்சி மையத்தின் முதன்மைத் தேர்வு பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக மாதம் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் வீதம் மூன்று மாதங்களுக்கும், புது டெல்லி மத்திய தேர்வாணைக் குழு நடத்தும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் பயணத் தொகையும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

பல்வேறு பயிற்சிகளை அளித்து சிறந்த முறையில் மாணவர்களை இந்திய குடிமைப்பணிகள் தேர்வுக்கு தயார்படுத்தியதன் மூலம் கடந்த 2011–ஆம் ஆண்டு அகில இந்திய குடிமைப்பணிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சார்ந்த 68 மாணவர்களில் 47 மாணவர்கள் இப்பயிற்சி மையத்தை சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்திற்கென அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்தில் 76 தங்கும் அறைகள், மாற்றுத் திறனாளிகளுக்கான அறைகள், குளிர்சாதன வசதியுடன் கூடிய வகுப்பறைகள், நூலகம், கணிப்பொறி அறை, கருத்தரங்கக் கூடம், உணவுக் கூடம் ஆகியவற்றை உள்ளடக்கி 10 கோடியே 14 லட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள இந்தப் பயிற்சி மையம், இந்தியாவிலேயே சிறந்த பயிற்சி மையமாக விளங்கும். ஒன்பது மாதங்களிலேயே கட்டி முடிக்கப்பட்ட இப்புதிய அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மைய கட்டடத்தை, இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை (பயிற்சி) முதன்மைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 12.10.2012